புதுச்சேரி அரசு
சமூக நலத்துறை

## <u>செய்திக்குறிப்பு</u>

சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் மூலம் ஆண்டுதோறும் அக்டோபர் 1 ஆம் நாள் உலக முதியோர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்த விழாவின் ஒரு பகுதியாக முதியோர்களின் நலனுக்காக தொண்டாற்றும் தனி நபர் மற்றும் நிறுவனங்களின் சீரிய பணியை பாராட்டும் விதமாக தேசிய விருதான “வயோஸ்ரேஷ்த சம்மன்” என்ற விருதை 13 பிரிவுகளில் வழங்கி கவுரவிக்கிறது.

இதற்காக மத்திய அமைச்சகம் அனைத்து மாநில அரசு மற்றும் யூனியன் பிரதேச நிர்வாகத்திடமிருந்து பரிந்துரைகளை வரவேற்கின்றது. எனவே மத்திய அரசின் வழிமுறைகள்படி தகுதிவாய்ந்த தனி நபர்கள் மற்றும் நிறுவனங்கள் விண்ணப்பங்களை சமூக நலத்துறை, எண் 1, சாரதாம்பாள் நகர், எல்லைபிள்ளைச்சாவடி, புதுச்சேரி அலுவலகத்திற்கு 20.06.2016க்குள் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இதற்கான வழிமுறைகள் சமூக நலத்துறை இணையத்தளத்திலும் (http://socwelfare.pondicherry.gov.in/) உள்ளது.

(R. மீனாகுமாரி)
இயக்குனர்